திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 10 அக்–06

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி., | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 100
பகுதி : 10
அக் 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## பொருளடக்கம்


**இதழ்மணம்** 751

**நூல் மதிப்புரை** 752

*தமிழ் மரபிலக்கணங்களில் இடைச்சொற்கள் - ஒரு மதிப்பீடு.*
– முனைவர் *க. சின்னப்பா*

**சிலப்பதிகாரம் காட்டும் கண்ணன்** 753
– பேராசிரியர் முனைவர் *அமுதன்*

**தமிழ்ப் பண்பாடு** – விரிவுரையாளர், *மோ.பேபி* 761

**வானொலியில் சான்றோர் சிந்தனை** 769
– முனைவர் *க. சின்னப்பா*

**பக்தி நெறியில் அறியப்படும் இறை உணர்வுகள்** – ஆய்வாளர் *கோ. சுரேஷ்* 771

**இனிய தமிழ்ப் பேச்சால் எல்லோரையும் கவர்ந்தவர்** 776
தமிழக முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் *திரு. கா. காளிமுத்து* அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

**ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்ரங்கள் மற்றும் மகிமைகள்** 780
தெலுங்கு விரிவுரையாளர். *என். கங்காபவானி*

# இதழ்மணம்

இலக்கணத் திறனாய்வு அடிப்படையில் எழுந்துள்ள "தமிழ் மரபிலக்கணங்களில் இடைச்சொற்கள் - ஒரு மதிப்பீடு" என்னும் நூல் இந்த இதழில் மதிப்புரை செய்யப்பட்டுள்ளது.

ஆழ்வார்களால் மனம் உருகி, மெய்மறந்து பாடப்பெற்ற கண்ணனின் அற்புதச் செயல்களின் பதிவு ஆய்ச்சியர் குரவையிலேயே வித்திடப் பெற்றுள்ளது என்பதை விளக்கும் "சிலப்பதிகாரம் காட்டும் கண்ணன்" என்ற கட்டுரை இந்த இதழை அலங்கரித்துள்ளது.

தமிழர் வாழ்வில் அன்றாடம் இடம் பெறும் உணவு, ஆடை, அணிகலன், திருமணம், விருந்தோம்பல் முதலானவை "தமிழ்ப் பண்பாடு" என்ற கட்டுரையாக இவ்இதழில் மலர்ந்துள்ளன.

மனித வாழ்வு மேன்மையுற அமைவதற்கு மனிதன் தீயசெயல்களை நீக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் "தீது அகற்று" என்னும் சிந்தனை இவ்விதழைச் சிறப்புச் செய்கிறது.

அன்பினை வாயிலாகக் கொண்டுள்ள பக்தி நெறியே இறைவனை அறிய உணர்வது என்பதை விளக்கும் "பக்தி நெறியில் அறியப்படும் இறை உணர்வுகள்" என்னும் கட்டுரை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.

இந்த இதழில் அரசியல் பண்பாளராகத் திகழ்ந்த முன்னாள் சட்ட மன்ற அவைத்தலைவர், திரு.கா. காளிமுத்து அவர்களின் நினைவுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

குற்றாலம் தெலுங்கு பேராசிரியை என். கங்காபவானியின் "ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்ரங்கள் மற்றும் மகிமைகள்" என்னும் கட்டுரையும் இவ்விதழில் வெளிவந்துள்ளது.

பல்சுவை நிறைந்த கருத்துப் பெட்டகமாக இந்த இதழ் திகழ்கின்றது.

—பதிப்பாசிரியர்.

# நூல் மதிப்புரை

டாக்டர் *க. சின்னப்பா*

நூல் : **தமிழ் மரபிலக்கணங்களில் இடைச் சொற்கள் - ஒரு மதிப்பீடு.**

*விலை : ரூ. 180. பக்கம் : 232 பதிப்பு : மார்ச் 2006.*

ஆசிரியர் : முனைவர் *ப. வேல்முருகன்.*

தொல்காப்பியம் தமிழ் மொழியின் பண்பாட்டையும், தமிழிலக்கியத் தொன்மையையும் நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம்பெருநூல் ஆகும். இலக்கண நூலே ஆயினும், எழுத்திற்கும் சொல்லிற்கும் மட்டும் இலக்கணம் உரைப்பதோடு நில்லாமல் தமிழர் வாழ்க்கையை ஒட்டி அமைந்த இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறும் நூலாக இருத்தலே இதன் சிறப்பு ஆகும். அதனால் தான், தொல்காப்பியச் சொல்லதிகாரம் இலக்கிய மொழியியல் அறிஞர்களுக்கும், திறனாய்வாளருக்கும் பயன் நல்குவதாக அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புடைய நூற்பகுதியைத் திறம்பட ஆராய்ந்து "தமிழ் மரபிலக்கணங்களில் இடைச்சொற்கள் – ஒரு மதிப்பீடு" என இந்நூல் வடிவில் விளக்கியுள்ளார் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ப. வேல்முருகன் அவர்கள்.

இடைச்சொற்கள் பற்றிய சில ஆய்வுக் குறிப்புகளைப் பற்றி மதிப்பீடு செய்துள்ளார். இடைச்சொல் பற்றிய முழுமையான மதிப்பீட்டு ஆய்வுகள் இதுவரை வெளிவரவில்லை. எனவே இந்த ஆய்வில் தொல்காப்பியம் முதல் நேமிநாதம் முடிய உள்ள இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள இடைச் சொற்களை வரலாற்றியல் நோக்கில் ஆய்வு செய்து தந்திருக்கிறார்.

இடைச்சொற்களைப் பகுத்தும், வகுத்தும் விளக்கிக் காட்டியுள்ளார். இடைச் சொற்களின் இலக்கணக் கூறுகள் வடமொழிக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன என்பதற்குத் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் எழுதிய 'Foreign models in Tamil Grammar' என்ற நூலைச் சுட்டிக் காட்டியுள்ளார் முனைவர் ப. வேல்முருகன் அவர்கள்.

வரலாற்று அடிப்படையில் இடைச்சொல் பற்றிய செய்திகளை ஆராய்வதற்கு கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தமிழ் மொழியில் தோன்றிய மரபிலக்கணங்களே அடிப்படையாக அமைந்துள்ளன என்று இந்தநூலில் கூறப்பட்டுள்ளது.

# சிலப்பதிகாரம் - காட்டும் கண்ணன்

பேராசிரியர் முனைவர் *அமுதன்*,
பொள்ளாச்சி.

**கண்ணன்**

அவன் முகம் இனியது; முடி இனியது; இதழ்கள் இனியவை; இதயம் இனியது; விழிகள் இனியவை; விரல்கள் இனியவை; குழல் இனியது; குறுமுறுவல் இனியது; அவன் பண்கள் இனியவை; அவன் கடித்துக் கொடுக்கும் பழங்கள் இனியவை

எவன் இனிமையின் ஊர்வலமோ, எவனிடம் இனிமை இல்லாதவை இல்லையோ, அவன் பெயர்தான் கண்ணன்.

இந்த இனிமைகள் யாவினும் சிறந்த இனிமை, அவன் அன்பர் ஆனோரிடம் கொண்ட எளிமை.

கண்ணனின் இந்த எளிமைக் குணங்களே ஆழ்வார்களின் அருமைப் பாசுரங்களில், தொட்ட இடமெல்லாம் அமுது ஊற்றினை ஒத்துச் சுரந்து கூட்டுப்பட்டுக் கிடக்கிறது.

கண்ண பெருமானின் இந்த எளிமைப் பண்பிற்கே பாவடிகள் தேன்வடியப் பாடும் இளங்கோவடிகளும் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்கின்றார்.

கண்ணன் எனும் அந்த இனிமையின் பேரூற்றை, எளிமையின் எல்லை நிலத்தை, தம் காவியத்தில் இடம்பெற வைக்க வேண்டும் என்று கருதிய இளங்கோவடிகள், "ஆய்ச்சியர் குரவை" எனும் இசைப்பாட்டுத் தொகுதியைத் தம் காவியத்தில் இடம்நோக்கி இணைத்துக் கொண்டார்.

கண்ணன் என்ற அந்தத் திருப்பெயர் நம்மாழ்வார் திருவாக்கு,

"கண்ணாவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்கு"

"நம் கண்ணன் கண்ணல்லது
இல்லையோர் கண்ணே" (திருவாய் 2 : 2 : 1)

என்பார் நம்மாழ்வார். தேவர்க்கும் மனிதர்க்கும் கண்ணாயிருப்பவன். கண்ணில்லாவிடில் எப்படிச் செயல்புரிவது அரிதோ, அப்படியே நித்திய சூரிகளோடு, நித்திய சம்சாரிகளோடு வேறுபாடின்றி இவனில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது.

கம்பர் நம்மாழ்வாரின் கண்ணன் எனும் பெயரை எடுத்துக் கொண்டு நயமான விளக்கம் ஒன்று தருகிறார்.

மிதிலை வீதியில் நின்று இராமனின் அழகைப் பருகிய மிதிலை மாதர்கள் இராமனை அப்படியே கண்களால் எடுத்துச் சென்றார்கள்; எல்லாருடைய கண்களிலும் இராமன் நிறைந்திருந்தான். ஆதலால், பெரியோர்கள் கண்ணன் என்று இவனுக்குப் பெயரிட்டார்கள். கண்ணன் என்று அவர்கள் பரம்பொருளுக்குப் பெயரிட்டதற்கு இன்று விளக்கம் கிடைத்தது! என்கிறார் கம்பர் பெருமான்.

"யாதினும் உயர்ந்தோர் தம்மை
யாவர்க்கும் கண்ணன் என்று
ஓதிய பெயர்க்குத் தானே
உறுபொருள் உணர்த்தி விட்டேன்" (கம்ப 1:19:6)

இங்கு நம்மாழ்வாரை, "யாதினும் உயர்ந்தோர்" என்று குறிப்பிட்டிருப்பதால் வேதம் தமிழ் செய்த மாறன்மேல் கம்பருக்கிருந்த பேரன்பும் பெருமதிப்பும் புலப்படுகின்றன.

"காண்பார்க்கும் காணப் படுபொருட்கும் கண்ணாகி" என்பான் கவந்தன்.

காண்பார்–உயிர்(சித்து); காணப்படுபொருள் – அசித்து (சடப்பொருள்கள்); கண்ணாவான் – இறைவன். கண்ணாகிய அவன் இன்றேல் காண்போர் எனப்படும் உயிரும், காணப்படுபொருளாகிய உலகியற் பொருள்களும் பயன் தருவதில்லை. ஆகவே, "நம் கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே" என்றார் நம்மாழ்வார்.

கண்ணபிரான் எளிமையின் எல்லைநிலம்.

இடக்கை வலக்கையறியாத ஏழை ஆயர்களின் அன்புத் தெய்வம் அவன். சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை நாடகப்பாணியில் இப்படி ஆரம்பிக்கிறது.

விடிகாலை மதுரைக் கோட்டை முரசு முழங்குகிறது.

ஐயை, அரண்மனைக்கு நெய் கொண்டுபோய்க் கொடுக்கும்முறை நாள் இது என்று உணர்கிறாள். தயிர் கடைகிறாள் மத்தும் கயிறும் கொண்டு! வெண்ணெய் திரளவில்லை காரணம் பால் தயிராகவில்லை. காளைகளின் கழுத்தில் கட்டியிருக்கும் கழுத்துமணி அறுந்து கணீர் என்று மண்மேல் விழுகிறது.

ஆடுகளின் குட்டிகள் வழக்கம்போல் துள்ளியோடி மகிழ்ச்சி காட்டவில்லை.

ஏதோ ஒரு தீங்கு நிகழவுள்ளது. "வருவதொன்றுண்டு" என்று உணர்கின்றாள் ஐயை. தன் மகளை அழைக்கின்றாள். மகளே வருந்தவேண்டா; திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை; நம் குலமுதல் தெய்வமாகிய கண்ணன், அன்று தன் அண்ணன் பலராமனுடனும் நப்பின்னைப் பிராட்டியுடனும் ஆடிய பால சரித விளையாட்டுக்களை மாதர்க்கணியாகிய கண்ணகி, காணக் குரவைக் கூத்தாக இப்போது ஆடுவோம் என்கிறாள். அவள் குரவைக்கூத்துக்கு நம்பிள்ளை தரும் விளக்கம் இது.

> குரவைக் கூத்து – இடையர் செருக்குக்குப்
> போக்குவிட்டு ஆடுவது ஒரு கூத்து
> பிராமணர் ஐச்வரியம் (செல்வம்) விஞ்சினால்
> யாகங்கள் பண்ணுமாப் போலே, இடையர்
> போக்கு விடுவது ஒன்று.
> கோவலனும் கண்ணகியும் ஒருசேர இருப்பது
> கண்டு, தங்கள்குல நப்பின்னை
> கண்ணனும் ஒன்றாய்க் காட்சி தருவதாகவே
> கண்டு மகிழ்கின்றனர் ஆய்ச்சியர்
> கண்ணன் என்னும் கருந் தெய்வத்துக்கும்
> ஆய்க்குலத்துக்கும் அத்தனை உறவு! கண்ணகி
> நாத்தூண் நங்கை! (நாத்தனார்)

கண்ணனின் திருவிளையாடல்களைக் கொண்ட இக்குரவைக் கூத்தை நிகழ்த்தினால், நம் பசுக்களும் கன்றுகளும் துன்பம் நீங்கும் என்று கள்ளங்கபடு காணாத ஐயை தன் மகள் மாதரியிடம் கூறுவதாக ஆய்ச்சியர் குரவை ஆரம்பிக்கிறது.

இதனால், வெள்ளையுள்ளம் மேவிய அந்த ஆய்ச்சியர்கள், திக்கற்று நிற்கையில் துணையாக வந்து உதவுவதற்கு அவர்களுக்குக் கண்ணனே உரிய தெய்வம் என்றாகிறது.

இந்த ஏழைகளின் கைக்கெட்டும் தூரத்தில் காத்து நிற்கும் தெய்வம் கண்ணன் ஒருவனே. அவனின் சுலபனாந்தன்மையை, (சௌலப்பியத்தை) இளங்கோவடிகள் இங்கு சொல்லாமல் சொல்கிறார்.

கதியற்றவர்களின் கதியாக நிற்கும் தெய்வம் கண்ணனே என்று காட்ட இங்கு ஆசிரியர் இளங்கோவடிகள் ஐயையின் வாய்மொழியை அழகுறப் பயன்படுத்திக்கொண்டார். சௌலப்பியம் – தமிழில் நீர்மையாகும். நீரின்தன்மை பள்ளம் பாய்தல், தாழ்ந்தோருக்கு உதவ ஓடிவரும் தெய்வம் கண்ணனாகிறான்.

கண்ணன் "கதியற்றவரின் கதியாகத் திகழ்கிறவன். சுதந்திரமிக்குள்ள ஆயர்களைக் காட்டிலும், சுதந்திரமற்ற ஆய்ச்சிகளிடம் மிகுந்த அன்புடையவனாய் இருப்பானாம் அவன்.

ஆய்ச்சியர்களைக் காட்டிலும் சுதந்திரமற்ற ஆயர் சிறுமிகளிடம் அன்புமிகப் பூண்டவனாம் அவன். அவர்களைக் காட்டிலும் சுதந்திரமற்றுத் தன்னை அண்டி இருக்கும் பசுக்களிடம் மிகுபிரியம் கொண்டிருப்பானாம் அந்தக் கண்ணன்.

பசுக்களைக் காட்டிலும் அபலைகளான கன்றுகளிடம் அவன் காதல் இன்னும் விஞ்சியிருக்கும்" என்று ஆச்சாரியப் பெருமக்கள் கண்ணனின் எளிமையில் ஈடுபட்டு உருகுவர்.

"மழக்கன்றினங்கள் மேய்த்துத்திரிவான்!"

பெரிய 1:2:20

"கன்று மேய்த்து விளையாடும் கோவலன்"
"கன்று மேய்த்துகக்கும் காளை" நா:12:8

என்றெல்லாம் ஆழ்வார் பெருமக்கள் கண்ணனின் இந்தச் சௌலப்பியம் குறித்து உருகுவர்.

கண்ணனின் அந்தச் கலபனாந்தன்மையைக் காட்சிப் படுத்துதற்கு "ஆய்ச்சியர் குரவை" இளங்கோவடிகட்கு அரிய வாய்ப்பாய் அமைந்தது.

கன்று குனிலாக் கனியுதிர்த்த அகடிதகடநா சாமார்த்தியன் (மக்களால் செய்தற்கரிய செயல்கள் செய்தவன்) இன்று நம் ஆநிரைமொய்க்கும் தொழுவத்துக்குக் குழலூதிய வண்ணம் கண்ணன் வருவான் என்று ஆய்ச்சியர்கள் திடமாக நம்புகின்றனர். அவன் கொன்றையந் தீங்குழல் கேட்போம் என்று குமையாத நம்பிக்கையுடன் உள்ளனர் ஆய்ச்சியர்கள். அவர்கள் அநுபவம் அது

"கன்று குனிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி"

பாம்பு கயிறாகக் கடல் கடைந்த சாதனையாளன் ஈங்கு நம் ஆனுள் அழைக்க வருவான் என்பது அவர்கள் திட உறுதி. கொல்லையஞ் சாரல் குருந்து ஒசித்த மாதவன் இன்று முல்லையந் தீங்குழல் ஊதிவருவான் என்கின்றனர். இடக்கை வலக்கை அறியாத இவ்வேழைகளின் உறுதியை என் என்பது! "நம்பினோர் கெடுவதில்லை! நான்குமறைத் தீர்ப்பு".

வடவரையை மத்தாக்கி வாசுகியைக் கயிறாக்கிக் கடல் வயிறு கடைந்தவன் இந்த வைகுந்த நாதன்.

அந்தப் பெருமானே கண்ணன் எம்பெருமானாய் வந்து, யசோதைப் பிராட்டியின் தயிர்கடையும் மத்தால் அடியுண்டு அழுகின்றான்! கடலுக்கும் மத்திட்டுக் கலக்கியவன் தயிர் மத்தில் அடிபட்டுக் கலங்குகிறான். கடல் வயிறு கலக்கியவன் கைகள் இன்று யசோதை கையில் கடைகயிறால் அடிவாங்கி நிற்கும் நீர்மையை என் என்று போற்றுவேன்? என்று இளங்கோவடிகள் உருகுகின்றார்

உலகெல்லாம் உண்ட திருவாயன் தான் இன்று, இடைச்சியர் உறி வெண்ணெய்க்கு ஏங்கிய வாயோடு நிற்கிறான்.

மூவுலகையும் தன் செங்கமலப் பாதத்தால் இரண்டடியாய் அளந்தவன் தான், இன்று, அன்பர்களாம் பஞ்சவர்களைக் காக்கத் தூதாகக் கல்லிலும் முள்ளிலும் நடந்து திரிகின்றான்.

கோடை வெய்யிலிலே வருந்தியவர்கள், குளிர் நீரிலே விழுந்து நீரைக் குடிப்பதும், அதை வாரி மேலே இறைத்துக் கொள்வதும் செய்வதுபோலே, சம்சாரமாகிய கோடை வெய்யிலிலே வருந்திய இவர்களும் அவ்வெப்பத்திற்குப் போக்கு வீடாக எம்பெருமானின் குணங்களாகிய குளிர் நீரிலே குடைந்தாடுகிறார்கள்.

இவ்வாறெல்லாம் எம்பெருமான் கண்ணனின் எளிமையை ஆழ்வார்களைப் போலவே, ஏன்? ஆழ்வார்களையும் சில கூறுகளில் மிஞ்சிய ஆழ்வாராய் இளங்கோ அடிகள் நைந்து உருகிப் பாடுகிறார்.

குட்டைவாமனனாய் வந்து சிறிய அடிகளைக்காட்டி, கையிலே நீர்பட்டதும் வெயில்பட்ட மூங்கில் போலே திருவிக்கிரமனாய் மாறி, பேரடி கொண்டு, உலகளந்தது சரியாகத் தோன்றவில்லை இளங்கோ அடிகளுக்கு! காட்டுவது சிற்றடி அளந்தது பேரடி! வாமனனை ஏமாற்றியது தானே இது! இது "முறை நிரம்பாவகையாகும். ஆகவே இச்செயல் முறைதிரம்பி முடித்த செயல்" என்று அடிகள் சுட்டுகிறார்.

அவ்வாறு முறையில்லா முறையில் உலகளந்ததால் தான் இராமனாகி 14 ஆண்டுகள், திருவடிகள் சிவந்து கொப்பளிக்கக் கானகத்தில் அலைந்து திரிய நேர்ந்தது என்று வஞ்சப்புகழ்ச்சி தோன்றப் பாடியுள்ளார் அடிகள்.

கடவுளே ஏமாற்றினாலும் ஏமாற்றிய அவனுக்குத் தண்டனையுண்டு என்று கூறாமல் கூறுவார் போன்று இங்கு அடிகள்,

"மூவுலகம் ஈரடியால்
முறைநிரம்பா வகை முடியத்
தாவிய சேவடிகள் சேப்பத்
தம்பியுடன் கான்போந்து"

என்று கூறும் நுட்பம் கற்பாரை வியக்க வைக்கிறது.

கண்ணன் மத்துறு கடை வெண்ணெய்க் களவினில், கட்டுண்டு உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவு எத்திறம்? என்று ஆறுமாதமும்;

கண்ணன் பிறந்தவாறும், வாழ்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்து, ஐவர்க்குத் திறங்கள் காட்டிச் செய்த மாயங்களையெண்ணி ஆறுமாதமும், நம்மாழ்வார் உண்ணாது உறங்காது மோகித்துக் கிடந்தார் என்பது ஐதீகம்.

எல்லா உலகுக்கும் ஈசனாய் இருப்பவனைக் கட்டவும், அடிக்கவும், திட்டவும் படியான வாய்ப்பு, யசோதை என்னும் ஓர் ஆய்ச்சிக்குக் கிட்டியது. ஆதலால் அவளை அசோதை என்னாமல் "அசோதையார்" என்று அழைத்து மகிழ்கிறார் அடிகள்.

> "கடல் வயிறு கலங்கிய கை அசோதையார்
> கடைகயிற்றால்
> கட்டுண்கை, மலர்க்கமல உந்தியாய்! மாயமோ?
> மருட்கைத்தே"

வெண்ணெய்க் களவுக்கு இவனை உரலோடு சேர்த்துக் கட்ட யசோதைக்குக் கயிறு போதாது இவனை விட்டு விட்டு கயிறு எடுக்கப் போனால் இவன் ஓடி விடுவான்; தீம்பன்! என்செய்வேன்! என்று யசோதைப் பிராட்டி படும் மனஉளைச்சலைக் காண இயலாமல் தன் பொன்னுடலைச் சுருக்கிக் கொண்டு "கட்டிக்கொள்" என்றானாம் எம்பெருமான்!

அதனால் "கட்டுண்ணப் பண்ணிய அப்பன்" என்பார்கள் ஆழ்வார்கள்.

எல்லா விருப்பங்களும் ஈடேறிக் குறைவிலா நிறைபொருளாகிய எம்பெருமான் வெண்ணெய்க் களவு செய்தது ஏன்?

அடியார்கள் தீண்டிய பொருளைத் தானும் தீண்டி உண்ணும் பேராசையே அதற்குக் காரணம் என்பார்கள் ஆச்சாரியர்கள்.

"சர்வேசுவரன் ஒரு குறையுடையவனாய் வந்து அவதரித்து, அடியார்கள் தீண்டிய பொருளை உண்ணாமல் தரியானாய், அதுதான் நேர்வழியிலே கிட்டாமையாலே களவு செய்து, வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நின்றதுவே சௌலப்பியம்" என்பது திருவாய்மொழி ஈடு.

"வைகலும் வெண்ணெய்
கைகலந்து உண்டான்
பொய் கலவாது என்
மெய் கலந்தானே!"

என்று வெண்ணெய்க் களவில் ஈடுபடுவர் நம்மாழ்வார். (திருவாய் மொழி 1 : 8 : 5)

ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் விரித்துள்ள இத்தனை பாசுரங்களுக்கும் விரிவுரைகளுக்கும் மூலவிதை இளங்கோவடிகளின் "ஆய்ச்சியர் குரவை"யில் ஊன்றப்பட்டுள்ளது.

கண்ணன், பள்ளம் பாயும் வெள்ளம் அனைய தயாளன்.

தீனரைக்காக்க ஓடும் தீனதயாளு. எளிமையின் எல்லை நிலம். ஆய்ச்சியர் மாட்டு அவன் காட்டிய அன்புப் பெருக்கு, தீனர் தயாளன் இறைவன் என்பதன் குறியீடு.

இத்தனையையும் சுட்டி நிற்கிற எழில் ஓவியம், இளங்கோவடிகள் தீட்டியுள்ள "ஆய்ச்சியர் குரவை".

சிலப்பதிகாரம் எனும் காவியத்துள் ஆய்ச்சியர் குரவை என்னும் ஒரு சிற்றறைக்குள் "ஆலமரத்தின் அருங்குறளாய் பேருலகமாய் பாகவத நிகழ்ச்சிகள் பலவற்றையும் அடக்கி வைத்துள்ள அடிகளின் திறம் நம்மை வியக்க வைக்கிறது.

ஆய்ச்சியர் குரவையில், கண்ணன் ஆய்ச்சியர் துகில் ஒளித்தல், சக்கரத்தால் பொழுதை மறைத்தல், பாம்பு கயிறாகக் கடல் கடைதல், குருந்த மரத்தை ஒசித்தல், கன்று குனிலாக் கனியுதிர்த்தல், நப்பின்னை நம்பி, மூத்தபிரான் பலராமன் ஆகியோருடன் குரவையாடல், ஏழு காளைகளை அடக்கி, நப்பின்னைப் பிராட்டியை மணம் முடித்தல், அசோதைப் பிராட்டியார் கண்டிப்பு, துவராபதி வாழ்க்கை, கருடப்புள் ஊர்தல், திகிரிப்படை தரித்தல்–முதலிய அத்தனை அற்புதச் செயல்களையும் "ஆய்ச்சியர் குரவை"யின் ஒரு சில பக்கங்களிலேயே பதிவு செய்துவிட்டுப் போயிருக்கிறார் இளங்கோ அடிகள்.

இளங்கோவடிகளின் இந்த ஆய்ச்சியர் குரவைப் பதிவின் விரிவே, திருவிக்ரம அவதாரம் போல விரிந்து தமிழ்நாட்டு வைணவப் பேருலகமாய் மலர்ந்திருக்கிறது என்பது மிகைக் கூற்றாக விளம்பியது ஆகாது எனலாம்.

# தமிழ்ப்பண்பாடு

*மோ. பேபி* (விரிவுரையாளர்)
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி,
வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னுரை

ஒரு சமுதாயத்தின், ஒரு நாட்டின் மேம்பாடு அது போற்றி பின்பற்றும் பண்பாட்டுக் கூறுகளைப் பொறுத்தே அமையும். எனவே இலக்கியப் படைப்பாளர்கள் காலங்காலமாகச் சமுதாயத்தைக் காத்து வரும் பண்பாட்டுக் கூறுகளைத் தொடர்ந்து பின்பற்றும் வகையில் வலியுறுத்தி வருகின்றனர்.

பண்பு

பண்பாடு எனும் சொல் மிக அண்மைக்காலத்தில் உருவானதாகும். இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் டி.கே.சி. ஆவர். சங்க இலக்கியங்களிலோ அவற்றிற்குப் பிற்பட்ட இலக்கியங்களிலோ இச்சொல் இடம் பெறவில்லை. "பண்பு" என்ற சொல்லே தொன்று தொட்டு வழக்கில் இருந்து வந்துள்ளது.

"இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றி"
—தொல்காப்பியம்

*"பாடறிந்தொழுகும் பண்பினாரே"* —புறநானூறு

"பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்" — கலித்தொகை

இங்கு வருகின்ற "பண்பு" என்கின்ற சொல் பண்பாட்டைக் குறிப்பதன்று. இச்சொல் மக்கட் "குணத்தை" சுட்டுவதாக அமைந்துள்ளது. அகராதிகளிலும் பண்பாடு, பண்பாளன், பண்பு ஆகிய சொற்களே இடம் பெற்றுள்ளன.

பண்பாடு-சொல் விளக்கம்

பண்பாடு என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் "Culture" என்பதாகும். கல்சர் என்ற ஆங்கிலச் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் "பேக்கன்" (Bakken) என்பவர் ஆவார். இச்சொல் இலத்தீன் மொழிப்பதமான கோலா என்னும்

அடிச்சொல்லிலிருந்து வந்தது. இவ்வடிச்சொல்லின் பொருள் "பண்படுத்து" அல்லது "மேன்மைப்படுத்து" என்பதாகும். பேக்கன் காலம் கி.பி. 1561 முதல் கி.பி. 1626 வரையாகும். எனவே ஆங்கிலத்தில் Culture என்ற சொல் 16ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கிறது என்பது புலனாகும்.

பண்பாடு விளக்கம்

மனிதன் சமுதாயத்தில் ஒழுக்க முறைகளின் அடிப்படையில் வாழ மிக அடிப்படையானது அவனது பண்பாடாகும். பண்பாடற்ற மனிதன் உயிரற்ற உடல் போன்றவன் ஆவான். "மரபின் வளர்ச்சிதான் பண்பாடாகிறது" என்கிறார் இராமசாமி. மனிதன் தொடர்ந்து பின்பற்றும் பழக்கவழக்கங்களே பண்பாடாக மாற்றம் பெறுகின்றன. உயர்ந்த பண்பாடுகள் உலகம் முழுமைக்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றன. மனிதனை விலங்கினின்று வேறுபடுத்திக் காட்டுவதும் அவனது பண்பாடே ஆகும். சமூகத்தை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வதும் பண்பாடே ஆகும். பண்பாடு சமுதாயத்தைக் கட்டுக்கோப்பான ஒழுக்க நெறியில் வைக்கிறது. பழையவற்றை நீக்கி அவற்றுக்குப் பதிலாகப் பொருத்தமான புதியக் கொள்கைகளை மேற்கொள்வது நாகரிகம். பழந்தமிழ் இலக்கியங்களில் "நாகரிகம்" என்ற சொல்லே பண்பாடு என்ற பொருளில் வழங்கி வந்தது.

"நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" – நற்றிணை

"பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர்" – குறள்

இங்கு நாகரிகம் என்ற சொல் கண்ணோட்டம் என்ற பொருளில் அமைந்துள்ளது.

நாகரிகம் என்பது முற்றியநிலை என்றும், நாகரிகம் என்பது பண்பாட்டின் தொடக்கநிலை என்றும், நாகரிகம் மக்கள் பெருமளவில் நகரங்களில் ஒருங்கிணைந்து வாழ்ந்து வெளிப்படுத்தும் பண்பாட்டின் நிலை என்றும் விளக்கம் கூறப்படுகின்றது. ஆனால் நுட்பமாக ஆராய்ந்தால் பண்பாடும், நாகரிகமும் ஒன்றல்ல என்பது விளங்கும்.

தமிழ்ப்பண்பாடு

தமிழ்ப் பண்பாட்டின் தலையாய கூறுகளாகிய தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைமுறை, உணவுமுறை, ஆடை அணிகலன்கள் அணியும்முறை, திருமணம், விருந்தோம்பும் முறைகள், விழாக்கள், சடங்குகள், உறவுநிலைகள், கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, நடனம், கைவினைப்பொருட்கள் முதலிய கலை வெளிப்பாடுகள் அனைத்திலும் தமிழர்ப் பண்பாடு நிறைந்திருக்கின்றது.

அன்றாடவாழ்க்கை முறை

அன்றாட வாழ்க்கைமுறை என்பது மக்கள் காலையில் துயில் எழுதல் தொடங்கி இரவில் துயில் கொள்ளுதல் வரையிலான நிகழ்வுகளைக் குறிக்கும். பண்டைத் தமிழர்கள் வைகறைப் பொழுதில் துயிலெழுவதைப் போற்றி வந்துள்ளனர். இதனை "வைகறை யாமம் துயில் எழுந்து" – என்னும் ஆசாரக்கோவை தொடரால் அறியலாம். மேலும் பாவைப் பாடல் வைகறைப் பொழுதில் துயிலெழுதல் பற்றிப் பேசுகின்றது. மகளிர் விடியற்காலையில் எழுந்து வாசலைப் பெருக்கித் தூய்மை செய்து, சாணம் தெளித்து, அழகிய கோலங்களைப் போடுதலைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். பழையது, கூழ், களி போன்றவற்றை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தினர். பெண்டிர் மஞ்சள், சுண்ணம் போன்றவற்றைத் தேய்த்துக் குளித்தனர். பகல் பொழுதில் இல்லக் கடமைகள் செய்தல், தொழில்களுக்குச் செல்லுதல், பள்ளிக்குச் செல்லுதல் போன்றவற்றை வழக்கமாகக் கொண்டனர். மாலைப் பொழுதில் விளையாட்டுக்களில் ஈடுபடல், உடற்பயிற்சிகள் செய்தல், உடல்நலத்திற்காக நடத்தல், கோவிலுக்குச் செல்லுதல் போன்றவற்றைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர்.

உணவுமுறை

உலகில் முதன்முதலில் உணவை நாகரிகமாகச் சுவையுற சமைத்து உண்டவன் தமிழனே ஆவான். வேற்றுமக்கள் உணவுப் பொருட்களைப் பச்சையாக உண்டுவந்த காலத்தில், உணவைச் சோறு, கறி என இரண்டாகப் பிரித்து பல மருத்துவப் பொருட்களையும் சேர்த்து குழம்புகளைச் செய்து சுவையுற உண்ட பெருமை தமிழனையே சாரும்.

தயிர்க்குழம்பு வைத்து தலைவி உணவு பரிமாறுதலைக் குறுந்தொகை சுட்டுகிறது. மாதுளங்காயை மிளகுப் பொடியும், கறிவேப்பிலையும் இட்டு பசுவின் வெண்ணையில் பொரித்து பார்ப்பனர் உண்டனர் என்பதைக் கீழ்கண்டவாறு பெரும்பாணாற்றுப் படை சுட்டுகின்றது.

"சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமறி யளைஇ"

மேலும் அரிசியைப் புழுக்கிக் காயவைத்து இரும்பு உலக்கையால் குத்தி அரிசியாக்கி சமைத்து உண்டனர். மேலும் வரால்மீன், ஊறுகாய், வெண்ணெற்சோறு, கோழி, உடும்புக்கறி, தினைச்சோறு, கள் போன்றவற்றையும் உண்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆடை

ஆடை நெய்யும் கலையில் தமிழர்கள் சிறந்து விளங்கினர். சமுதாயத்தில் வாழும் பல நிலையினர் தத்தம் தகுதிக்கேற்ப ஆடைகள் அணிந்தனர். நூற்புத் தொழிலில் ஈடுபட்ட பெண்கள் "பருத்தி பெண்டிர்" எனப்பட்டனர். பருத்திப்பட்டு, ஆட்டுமயிர், எலிமயிர் கொண்ட ஆடைகளை நெய்து அணிந்தனர். பட்டாடை சங்க காலத்திலேயே காணப்படுகிறது. "கொட்டைக்கரைய பட்டுடை நல்கி" – பொருநராற்றுப்படை இதனைக் குறிப்பிடுகிறது.

அணிகலன்

அணிகலன்களை நேர்த்தியாகச் செய்வதிலும் அழகுற அணிவதிலும் தமிழர் ஈடுபாடு மிக்கு விளங்கினர். சிலப்பதிகாரம் அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்த 27 அணிகலன்களைக் குறிப்பிடுகின்றது. விரலணி, பரியகம், நூபுரம், பாடகம், சலங்கை, அரியகம், குறங்குசெறி, விரிசிகை, கண்டிகை, தோண்வளை, ஆடகம், கைவளை, பரியகம், வால்வளை, பவழவளை, வாளைப் பகுவாய் மோதிரம், மணிமோதிரம் போன்ற அணிகலன்கள் அக்காலத்தில் இருந்தன. மகளிர் காதில் தோடும், இடையில் மேகலையும், காலில் சிலம்பும், விரல்களில் மோதிரமும் அணிந்தனர். குழை, கடகம், தண்டை முதலிய பல அணிகலன்களை ஆடவர்

அணிந்தனர். இதனை,

*"வில்லோன் காலன கழலே தொடியோள்*
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே" – என்று குறுந்தொகையும்

"ஒழியும் ஒழியும் என ஒண் சிலம்பு
அபயம் அபயம் என அலற" – என்று
கலிங்கத்துப்பரணியும் சுட்டுகின்றன.

திருமணம்

தமிழர் வாழ்க்கையை அகம், புறம் என்று பகுத்தனர். பிறர் அறியாவண்ணம் தலைவனும் தலைவியும் சந்தித்து பழகும் வாழ்க்கை களவு வாழ்க்கை என்றும், பெற்றோர் விருப்பம் இன்றி தலைவி தலைவனோடு சென்று வாழும் வாழ்க்கை உடன் போக்கு என்றும் குறிக்கப்பட்டது.

திங்களும் உரோகிணியும் கூடிய நல்ல நாளில் திருமணம் நடந்தது. பந்தல் அமைத்து, புதுமணல் பரப்பி, விளக்குகளை ஏற்றி, மாலைகளைத் தொங்கவிட்டு இல்லத்தை அழகுப்படுத்தினர். இவ்வாறு கூடிய சடங்குடன் அன்று திருமணம் நடத்தப்பட்டது.

*விருந்தோம்பல்*

விருந்தினரைப் போற்றுதல் தமிழர்களின் தலையாயப் பண்புகளில் ஒன்று. தொல்காப்பியம் விருந்து போற்றுதலைத் தலைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது.

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" (தொல்.கற்பு–11)

சங்கப் புலவர்கள் விருந்தோம்பலைப் பல இடங்களில் போற்றிக் குறிக்கின்றனர். வேளை தவறிய வேளையில் விருந்தினர் வந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றனர். இதனை,

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" என்று
நற்றிணை (142) குறிப்பிடுகிறது.

## நம்பிக்கைகள்

நன்று, தீது, ஆர்வம், அச்சம் போன்றவற்றால் தமிழரிடையே நம்பிக்கைகள் வழங்கி வருகின்றன. நல்லநாள் நல்ல நேரம் பார்த்து வேலையினைத் தொடங்குதல், பறவையொலி முதலிய சகுனம் பார்த்தல், பல்லியின் குரல் கேட்டல், பல்லி உடல்மேல் விழுவதற்குப் பலன் எண்ணல், விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல், கண், தோள், துடித்தல், கனவுக்குப் பொருள்காணல், விண்மீன் நிலைகாணல், களி பேயோட்டல், கூடல் இழைத்தல் போன்ற பல நம்பிக்கைகள் மக்களிடையே இருந்து வந்தன. வள்ளலை நாடிச்சென்ற புலவர், தனக்குப் பரிசில் கிட்டாததற்குப் புரவலன் காரணமல்லன், புறப்பட்ட பொழுதும் அப்போது எதிர்ப்பட்ட பறவையுமே காரணம் எனச் சங்கப் பாடல் குறிப்பிடுகிறது.

"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளி வருநர் பழியலர் அதனால்
புலவேன் வாழியர் ஓரி"
என்று கழைதின் யானையார் பாடுகிறார்.

## பழக்கவழக்கங்கள்

தமிழர் தம் வாழ்க்கையில் சில பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வந்தனர். தான் சோறுண்ணும் முன் காக்கைக்குச் சோறிடும் பழக்கத்தைத் தமிழர்கள் கொண்டுள்ளனர். இதனைக் காக்கையது பலி எனக் குறுந்தொகை (210) சுட்டுகிறது. புறப்படுபவரை ஏழடி பின்சென்று வழியனுப்பினர். கணவனை இழந்த மகளிர் அணிகலன் அணிவதை நீக்கும் வழக்கம் கொண்டிருந்தனர். இறந்தவர்களைத் தாழியில் இட்டுப் புதைத்தனர்.

## வழிபாடு

தமிழர்கள் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு போன்ற முறையில் தெய்வங்களைப் பிரித்து வழிபட்டனர். தம்குலப் பெரியோர்களையும், இறந்த முன்னோர்களையும் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். தம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று உள்ளது அதையே தெய்வம் என்று கருதினர். தெய்வங்களைத் தொல்காப்பியர்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

என்னும் நூற்பாவில் நிலத்திற்கேற்ற அடிப்படையில் குறிப்பிடுகிறார்.

### விழாக்கள்

பண்டைத் தமிழகத்தில் கார்த்திகைத் திருவிழா, திருவோணத் திருவிழா, தைநோன்புத் திருவிழா, காமவேள் விழா, இந்திர விழா முதலிய விழாக்கள் நடைபெற்றன. மேலும் தைப்பொங்கல், தீபாவளித் திருவிழா, நவராத்திரி, சித்திரா பௌர்ணமி, மாசிமகம், ஆடிப்பெருக்கு போன்றனவும் குறிப்பிடத்தக்க விழாக்கள் ஆகும்.

### சடங்குகள்

தமிழர் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குகள் இடம்பெறுகின்றன. குழந்தையைத் தொட்டிலில் போடுதல், பெயரிடல், காதுகுத்தல், மொட்டையடித்தல், பெண்ணுக்குப் பூப்பு நீராட்டு, மணவுறுதி செய்தல், வதுவை புரிதல், வளைகாப்பு இடுதல், கணவனை இழந்த மகளிர் வளையல் அகற்றல், அணிகலன் துறத்தல், இறந்தவர்க்கு ஆற்றும் ஈமச்சடங்கு, நடுகல் நாட்டல், ஆண்டுதோறும் நீத்தார் நினைவுக் கடன் ஆற்றுதல் என வாழ்வின் பல நிலைகளில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டன.

### கலை

தமிழரின் கலை வெளிப்பாடுகள் அவர்தம் பண்பாட்டுப் பெருமைக்குச் சான்று பகர்வன. ஆய கலைகள் 64 என்பது மரபு. இசை, நாடகம், கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளில் தமிழர் சிறந்து விளங்கினர்.

கட்டிடக் கலையைப் பற்றி "சுடுமண் ஓங்கிய நெடுநிலைகோட்டம்" என்று மணிமேகலை குறிப்பிடுகிறது. பல்லவர்கள் காலக் கட்டிடக்கலைக்கு மாமல்லபுரம் குகைக் கோவில்கள் சிறப்பு செய்கின்றன. தமிழர் கட்டிடக்கலையின் சிறப்பாகச் சோழர்கால கோவில்கள் விளங்குகின்றன. நாயக்கர்காலச் சிறப்பாக நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள் சிறப்பு செய்கின்றன.

ஓவியக் கலைக்குச் சிறப்பு செய்யும் வகையில் மகேந்திரவர்ம பல்லவன் சித்திரகாரப்புலி என்றே அழைக்கப்பட்டான். மதுரை மீனாட்சியம்மன் கோயில், தஞ்சை சரஸ்வதி மகால் போன்றன ஓவியக் கலைக்குச் சிறப்பு செய்கின்றன.

சிற்பக் கலைக்குக் கண்ணகி சிலையும், பாறையில் இடம்பெற்றுள்ள பகீரதன் சிற்பமும், தாராசுரம் ஐராவதேசுவரர் கோவில் சிற்பங்களும், தஞ்சை பெரிய கோவில்களும் சிறப்பு செய்கின்றன.

இசைக்கலைக்குத் தோள், துளை, நரம்பு, வெண்கலம், (கஞ்சம்) போன்றன சிறப்பு செய்கின்றன. தெய்வம் உணாவே மாமரம் புட் புறை (தொ.946) எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. சங்க இலக்கியங்கள் யாழ், பறை முதலியன எனச் சுட்டுகின்றன. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, தளரசமுத்திரம், சச்சபுடவெண்பா, இந்திரகாளியம், பதினாறுடலம், தாளவகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்குறைக் கோவை முதலியன பண்டைய இசைப் பனுவல்களாகும்.

நடனக்கலை என்பது ஆடற்கலையாகும். சிவபெருமான் ஆடல்வல்லான் என்றே குறிக்கப்பட்டார். நடனம் அல்லது நடம் என்பதற்கு அழகுற ஆடுவது என்பது பொருள். பரத சாத்திரம் வடமொழியில் இயற்றப்பட்டது. அதற்கும் முந்தியது தமிழ்ப் பரதம் என்று சுட்டப்படுகிறது.

### கைவினைகள்

தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை கைவினைக் கலைகள் பல செழித்து வளர்ந்துள்ளன. மண்பொம்மைகள், காகித பொம்மைகள், மரப் பொம்மைகள், பூ வேலைப்பாடுகள், அழகிய பாய்கள், மாலைகள், வளையல்கள், விளையாட்டுப் பொருட்கள், பிளாஸ்டிக் பண்படுத்தி செய்யப்படும் பொருட்கள் போன்ற கைவினைப் பொருட்களைச் செய்தனர்.

### முடிவுரை

இவ்வாறு தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள் ஒவ்வொரு பொருட்களிலும், துறைகளிலும் காணப்பட்டு இன்றைய பண்பாட்டிற்கு நம்மை அழைத்து வந்திருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

# வானொலியில் சான்றோர் சிந்தனை

முனைவர் க. *சின்னப்பா,*
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை.

## தீது அகற்று

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா" - எனும் கணியன்

பூங்குன்றனாரின் புறப்பாடலில் தமிழனின் உயரிய சிந்தனை மரபைக் காணலாம். தனக்கு ஏற்படும் நன்மையும் தீமையும் பிறரால் வருவது கிடையாது. அது முற்பிறவியில் செய்த வினைப் பயனால் இப்பிறவியில் ஒருவனுக்கு நன்மையாகவோ, தீமையாகவோ அமைகிறது.

வள்ளுவப் பெருந்தகை தீய செயல்களைச் செய்ய அஞ்ச வேண்டும் என்னும் நோக்கில் தீவினையச்சம் என்னும் அதிகாரத்தை இயற்றியுள்ளார்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"

ஒருவன் தன்னை மறந்தாலும் பிறனுக்குக் கேடு செய்யக் கருதக்கூடாது. அதையும் மீறி அவன்கேடு செய்யக் கருதினால் அந்தக் கேடு அவனுக்கே வந்து சேரும் என்பது மேற்கண்ட பாடலின் பொருளாகும்.

தீய செயல்கள் செய்ய கொடியவர்கள் அஞ்சமாட்டார்கள். ஆனால் நல்லொழுக்கம் உடைய சான்றோர்கள் தீச்செயல் புரிய அஞ்சுவர். தீய செயல்கள் அனைவருக்கும் தீமையைத் தரும். எனவே, தீச் செயல்கள் என்பவை தீயை விடக் கொடுமையானவை. தீ வைத்தவரை ஒன்றும் செய்யாது. ஆனால் தீமை என்பது அப்படியன்று. வைத்தவனையும் பொசுக்கிவிடும். உலக வாழ்க்கை என்பது நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்ட வாழ்க்கையாக அமைகிறது. ஜான்மில்டன் எழுதிய சொர்க்க நீக்கம் என்னும் படைப்பு கடவுளுக்கும் (நன்மை) சாத்தானுக்கும் (தீமை) நடக்கும் போராட்டமாக அமைகிறது.

உலகின் ஆதி மனிதர்களான ஆதாம், ஏவாள் என்னும் தம்பதியர் கடவுளின் சொல்லைக் கேட்காமல் தீமைதரும் கனிகளை உண்டதால் கடவுளின் கோபத்திற்குள்ளாகி ஏதேன் தோட்டத்தை விட்டு கடவுளால்

விரட்டப்படுகின்றனர். தீவினையால், பாவம் செய்தமையால் கொடுமையான உலகவாழ்க்கையை அடைந்ததாகக் கிருஸ்தவ மறை சான்று பகர்கிறது.

அரிஸ்டாட்டில் தனது துன்பியல் நாடகங்களில் இடம்பெறும் பாத்திரங்களைக் காணும் மக்களின் உள்ளத்தில் இழிந்த கொடிய எண்ணங்களை நீக்கும் படியாகப் படைத்துள்ளார். இதனை அறிஞர்கள் உணர்வுச் செப்பம் எனக் குறிப்பிடுகின்றனர்.

சேரன் தம்பி இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரத்தின் மூன்று கருத்துகளில் ஒன்று *ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்* என்பதாகும். அதாவது முற்பிறவியில் செய்த வினையே அடுத்த பிறவியில் (ஊழ்) நன்மை, தீமை விதியாக வந்தமையும்.

கம்பர் இயற்றிய இராம காதையின் மையப் பொருள் அறம் வெல்லும் பாவம் (தீமை) தோற்கும். சிறந்த சிவபக்தனான இராவணன் செய்த தீமை அவனுக்குப் பெரும் அழிவை உண்டாக்கியது.

இந்தியப்புராணங்களில் காணப்படும் வதங்கள், செய்த தீமையால் அரக்கர்களுக்கு அழிவு உண்டாக்கியதாகக் குறிப்பிடப்படுகின்றன.

தம்மைப் பகைப்பவர்க்கும் தீமை செய்யாது விடுதலே சான்றோர்க்கு அழகாகும். தீமை செய்தவர்க்கு நன்மை செய்யுங்கள் எனப் புனித நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஒருவன் எவ்வளவு பெரிய பகையிலிருந்து தப்பினாலும் பிறனுக்குத் தீமை செய்து அதனால் உண்டாகும் பகையிலிருந்து தப்பவே முடியாது. அத்தீவினையானது அவனின் நிழல் போல பிறவி தோறும் தொடரும். இத்தீவினையை ஒழிக்கவே புத்தர், முகமதுநபி, இயேசு பிரான் போன்றோர் இப்புவியில் அவதரித்தனர்.

நாம் வாழும் இந்திய தேசமானது மகான்கள் அவதரித்த புண்ணிய பூமியாகும்.

ஔவையார் பாடிய புறப்பாடலொன்றை இங்கு நினைவு கூரலாம். காடாக இருந்தாலும் சரி, நாடாக இருந்தாலும் சரி, மேடாக இருந்தாலும் சரி, தாழ்ந்த பள்ளமாக இருந்தாலும் சரி, எங்கே நல்ல மக்கள் வாழ்கின்றனரோ அங்கே தான் வாழ்வு சிறக்கும் எனப் பெருமிதத்துடன் பாடுகிறார். ஆகையால் தீவினை அகற்றுவோம். வாழ்க வையகம்.

# பக்திநெறியில் அறியப்படும் இறை உணர்வுகள்

கோ. சுரேஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

உலகில் இறைவன் மீது பக்தி செலுத்துவதற்குக் காரணங்கள் இரண்டு என்பர் அப்பர் அடிகள். ஒன்று அச்சம், மற்றொன்று அன்பு.

இயற்கையின் அழகில் ஈடுபட்ட மனிதன் அதை முருகு என்று பெயரிட்டு கடவுளாகவே எண்ணி வணங்கினான். அதன் மீது ஆழ்ந்த அன்பு செலுத்தி வழிபட்டான். இங்கு அன்பு காரணமாக இறைபக்தி தோன்றியது. இதனை,

"அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினை நின்றி யூரை நீ'

என்னும் நாவரசர் வாக்கால் அறியலாம். அவ்வாறு தோன்றும் பக்தி நெறி என்பது யாது? அதன் வழி உணரப்படும் இறை உணர்வுகள் எத்தகையன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## பக்தி

பக்தி என்றால் என்ன? என்ற வினா எழும்போது சாதாரண நிலையில் இறைவன் மீது செலுத்தப்படும் அன்பு என்று இதற்குப் பொருள் கூறிவிடலாம். ஆனால் ஆன்மீக முறையில் அது இன்னதென பூரணமாக விளக்கிப் பொருள் கூறுவது எளிதன்று. எனினும் வடமொழியிலுள்ள நாரதபக்தி சூத்திரம், சாண்டில்ய பக்தி சூத்திரம் என்னும் நூல்கள் இவ்வினாவிற்கு விடை கூற முயன்றுள்ளன.

## அறிவு வழிச் செல்பவர்கள்

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்பது வள்ளுவரின் அறிவுலகக் கோட்பாடு. சாதாரண மக்களில் பலர் அறிவு வழிச் செல்பவரே. இவர்கள் மக்களாகப் பிறந்த பயனை எய்துகின்றனர்.

சாதாரண மக்களில் மட்டுமே இப்பிரிவு என்று கருதமுடியாது. ஆன்மிக வழியில் செல்பவர்களும் இப்பிரிவின் பாற்பட்டவரே ஆவார். அறிவுத்துறையில் ஆழ்ந்து செல்லும் ஆன்மிகவாதிகள் தத்துவ வாதிகளாகின்றனர். ஒரு முழுப்பொருளை அறிவின் துணை கொண்டுதான் அறியமுடியும் என்பது இவர்கள் நம்பிக்கை. காரணகாரியத் தொடர்புடன் அறிவின் துணைக்கொண்டு ஆராய்ந்தே மூலப்பொருளை அறிய முடியும் என இவர்கள் நம்புவது மட்டுமின்றி அறுதியிட்டும் கூறுகின்றனர்.

## அறிவும் பக்தியும்

அறிவு பக்திக்குத் துணை புரிவது எனக் கொள்ளலாம். இறைவன் மனிதர்களைப் படைக்கும்போதே அறிவுடன் தான் படைக்கிறான். ஆகவே, நம் முயற்சிக்கு அறிவின் துணையை நாடுவதில் தவறில்லை. அறிவின் துணைக்கொண்டு ஆராய்ந்து செயல்படாத பக்தி மூடபக்தியாகத்தான் இருக்கும். சில சமயங்களில் அறிவற்ற பக்தி சமயப் போராட்டத்தை விளைவிக்கிறது. சமயத்தின் பெயரால் ஆயிரக்கணக்கானவர் இன்றும் கொன்று குவிக்கப்படுகின்றனர். இது அறிவற்ற பக்தியின் விளைவாகும்.

## சமய வாழ்வுக்கு அறிவின் வழி தேவை

சுய வாழ்வுக்கு ஓரளவு அறிவின்வழி தேவைப்படுகிறது. இதில் கருத்து வேறுபாடு உண்டு. பக்தி உணர்வுக்கு உறுதி அறிவில் இருப்பதில்லை. எவ்வளவுதான் அறிவின் துணைக்கொண்டு இறைவன் இயல்புகளை அறிய முயன்றாலும் அப்பரம்பொருளிடத்தில் உணர்ச்சிபூர்வமான ஈடுபாடு ஏற்படாத உணர்வு மூலமாகப் பக்தியில் ஏற்படும் இன்பத்தை அறிவுவாதம் ஏற்படுத்த இயலாது. ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் பற்றி நாம் அறியும்போது அவர்கள் பெற்ற அனுபவமும் இன்பமும் உணர்வு மூலமும் உண்டாயின

என்பதை அறியமுடிகிறது.

"ஒரு மனிதன் பெற்ற உணர்ச்சியை மற்றொரு மனிதனுக்குத் தர முடியாது. ஆனால் தருக்க வாதத்தால் உண்மையை உணர்த்த முடியும் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் கூட அதனைப் பிறருடைய அறிவுக்கு விருந்தாக அறிவிக்கலாமே தவிர உணர்வுக்கு விருந்தாகப் படைக்க முடியாது. மெய்ப்பொருளை அடையும் வழி இதுதான் என்று அறிவு சுட்டிக் காட்டினாலும் அதில் சென்று பயனடைவதென்பது யாருக்கும் எளிதன்று. இராவணன் போன்றவர்கள் ஆயிரமறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவர்கள் தாம் என்றாலும் என்ன? தீயினை நயப்புறுதல் செய்த வினையைத் தான் செய்தான். எனவே அறிவு வாதமும் உணர்ச்சியற்ற தருக்க வாதமும் மனிதனை நன்னெறியில் உறுதியாகச் செலுத்தும் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று என்பார் கூற்று இங்கு நினையத் தக்கது."

பக்தி நெறியும் முக்தி நெறியும்

அணிவாசம் பாடிய மணிவாசகப் பெருந்தகையார் இறைவழிபாட்டுத் துறையில் இரண்டு நெறிகளைக் குறிப்பிடுகின்றார்.

1. பக்தி நெறி
2. முக்தி நெறி

இவற்றிற்குப் பலர் பலவாறு பொருள் கூறுவர். இவை அமைந்துள்ள பாடல்

"முக்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலர் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே"

என்பது.

முக்திக்கு உரிய வழியை அறியும் உயர்ந்த அறிவில்லாத கீழ் மக்களோடு கூடித்திரியும் என்னைப் பக்திமார்க்கத்திற்குரிய நெறிகளை அறியச் செய்து பழைய வினைகள் அனைத்தும் சிதறிப்போகும் வண்ணம் என் சித்தத்தைச் சார்ந்துள்ள ஆணவ மலத்தை அழித்து என்னையும் சிவமாக்கி ஆட்கொண்ட தந்தையாகிய சிவபெருமான் எனக்கு அருளிய முறைமையினை வேறு யார் பெறுவர்? என்பது இப்பாடலின் பொருள்.

இப்பாடலில் கூறப்படும் பக்திநெறி எது? முக்தி நெறி எது? என்பது ஆய்ந்து உணரத்தக்கது.

இந்த நெறிகளை வரையறுத்து உணர்வதற்குச் சைவ சித்தாந்தம் துணை செய்கிறது.

இறைவனை வழிபட்டு முக்தியை அடைவதற்குரிய வழிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நான்கையும் முக்திநெறி என மாணிக்கர் கூறினாரா என்பது சிந்திக்கத்தக்கது.

சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் நேரடியாக முக்தியை அடையச்செய்ய இயலாது. அவை ஞானத்தை அடைவதற்கான சாதனங்கள் தான். ஞான ஒளி ஒன்றே முக்தியை அடைய உதவும் நெறியாகும். எனவே, இங்கு அடிகளார் குறிப்பிட்ட முக்திநெறி ஞானமே என்பது பெறப்படும். ஞான நெறியை அடையும் முயற்சியின்றி வேறு பயனற்ற வழிகளில் வாழ்நாளைக் கழித்து வீண்பொழுது போக்குகம் பெற்றவர்களை அடிகள் முக்திநெறி அறியாத மூர்க்கர் எனக் குறித்தார் எனலாம்.

"உயிர்கள் இயல்பாகவே ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டுத் தம் அறிவை இழந்து கிடக்கும். இந்நிலையில் உயிர்கள் அந்த ஆணவமலம் பரிபாகமான நிலையை அடைந்தாலும் இறைவனது நுண்ணிய நிலையை அறியும் ஆற்றலை உடையன ஆகமாட்டா. அதனால் முதற்கண் அவனைப் பருநிலையில் (தூய நிலையில்) பொதுவாக உணருங்கால் செய்யும் பணிகளே சரியை முதலிய மூன்றுமாகும். நான்காவது படியான ஞானம் இறைவனை

நுண்ணியநிலையில் உண்மையாக உணர்ந்து நிற்கும் பணியாகும் என்பதை உணர்க" என்பார் கூற்று இதனை விளக்கும்.

இக்கூற்றினால் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றும் இறைவனை வழிபடும் பக்திநெறிகள் என்பதும், அவை ஞானத்தை அடைய உதவுவன என்பதும், ஞானமே இறைவனை நுண்மையாக உணர்ந்து அடைவதற்கான முக்திநெறி என்பதும் பெறப்படுகிறது.

பக்தர்களும், தத்துவவாதிகளும்

பக்தர்கள் அல்லது இறைவன் அடியார்கள் எனப்படுவோர் தத்துவவாதிகளினின்றும் வேறுபட்டவர்கள். தத்துவவாதிகள் செய்ய முடியாத ஒன்றைப் பக்தர்கள் செய்ய வல்லவர்கள். அவர்கள் எதிர்காலத்தைத் தெளிவாக அறிவர். தத்துவவாதியைப் பொருத்தமட்டில் தருக்க முறையில் ஆராய்ந்து எதிர்கால விளைவுகளைக் கணித்துக் கூறுவான். அது அவ்வாறே நடக்கும் என்று கூற முடியாது. ஆனால் தெய்வீக ஆற்றல், உள்ளுணர்வு என்ற இரண்டையும் பெற்றுள்ள பக்தன் மிக எளிதாக இதனைச் செய்து விடுகிறான். அவன் துணையாகக் கொள்வது தெய்வீக ஆற்றல். ஆதலால் கால தேசவர்த்தமானங்களைக் கடந்தும் அவனால் இதனைச் செய்ய முடிகிறது.

பக்தி என்பது இறைவனிடத்தில் செலுத்தப்படும் மிக உயரிய பண்பு. அது எல்லாத் தொழில்களையும் ஒருமுகப்படுத்தி இறைபணியில் ஈடுபடுத்துவது ஆகும்.

தலையாய பக்தி உணர்வை ஒருவன் பெற வேண்டுமாயின் பொறி உணர்வுக்கு இரையாகவுள்ள இந்த உலகத்தையும், அந்த உணர்வைத் தூண்டும் பற்றுகளையும், ஒரு சேர நீக்க வேண்டும் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

அறிவுவழிச் செல்பவர்கள் தத்துவவாதிகள், அன்பு வழிச் செல்பவர்கள் பக்தர்கள். அறிவால் ஆண்டவனை அடைய முடியும். பக்தி வழியே பரமனை அடைய உதவும் வழியாகும்.

# இனிய தமிழ்ப் பேச்சால் எல்லோரையும் கவர்ந்தவர்

நன்றி : தினமணி 9–11–2006

தமது இனிய தமிழ்ப் பேச்சால் எல்லோரையும் கவர்ந்தவர் கா. காளிமுத்து. சிறந்த இலக்கியவாதி, எழுத்தாளர், கம்பீரப் பேச்சாளர், தமிழ்மொழிப் பற்றாளர், பரபரப்புமிக்க அரசியல்வாதி என்ற பன்முகத்தன்மை கொண்டவர் அவர். விருதுநகர் மாவட்டம் ராமுத்தேவன் பட்டியைச் சேர்ந்த காளிமுத்து – வெள்ளையம்மாள் தம்பதிக்கு 25–5–1942ல் பிறந்தவர் கா. காளிமுத்து.

**15 வயதில் மேடை ஏறியவர்:**

உள்ளூரில் தொடக்க கல்வியைத் தொடங்கிய அவர் 15 வயதிலேயே மேடைகளில் பேசத் தொடங்கினார். 1957ல் சிவகாசி சட்டப்பேரவைத் தொகுதியில் முத்துராமலிங்கத்தேவரின் சீடர் முத்துராமானுஜ தேவர் போட்டியிட்ட போது அவரை ஆதரித்து மேடை ஏறி பிரசாரம் செய்தார்.

**இந்தி எதிர்ப்புப் பேராட்டம்:**

பின்னர், திராவிட இயக்கத்தில் ஈடுபாடு காட்டினார். 1965ல் மதுரை தியாகராஜர் கல்லூரியில் பட்டப்படிப்பு படிக்கும்போது இந்தி எதிர்ப்புப் பேராட்டத்தில் பங்கேற்றார்.

**கடிகாரம் அணிவதில்லை:**

அப்போது அவரைக் கைது செய்த போலீஸார் கைக் கடிகாரம், மோதிரத்தைக் கழற்ற வேண்டும் என்று கூறினார். அன்று கடிகாரத்தைக் கழற்றிய அவர் இதுவரை கடிகாரம் அணிந்ததில்லை. பின்னர், எம்.ஏ(தமிழ்) பிஹெச்.டி. பட்டம் ஆகியவற்றை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பெற்றார். சிறிது காலம் மதுரை வி.டி.சி. கல்வி மையத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**ஊராட்சித் தலைவர்:**

1967ல் ராமுத்தேவன் பட்டி பஞ்சாயத்துத் தலைவரானார். 1971ல் சிவகாசி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரானார். 1972ல் தி.மு.க. விலிருந்து விலகிய எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வைத் தொடங்கியபோது அக்கட்சியில் இணைந்தவர்களில் முக்கியமானவர் கா. காளிமுத்து.

எம்.ஜி.ஆர். மறைவை அடுத்து அதிமுக (ஜா) அணிக்குச் சென்ற அவர் பின்னர் அதிமுக (ஜெ) அணியில் இணைந்தார். அதையடுத்து கருத்து மோதல் காரணமாக அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் சேர்ந்தார். 1995ல் மீண்டும் அதிமுகவில் சேர்ந்தார். கட்சிகள் மாறிய போதிலும், திராவிட இயக்கத்தின் முன்னோடிகளான பெரியார், அண்ணாவின் கருத்துக்களைப் பரப்பும், பிரசார பீரங்கியாக இறுதிவரை விளங்கினார். தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரிடமும், தற்போதைய முதல்வர் கருணாநிதியுடனும் அரசியலில் இணைந்து பணியாற்றி மிகுந்த நட்புடன் இருந்தவர். கட்சி பாகுபாடின்றி அனைத்து அரசியல் கட்சியினரிடமும் நட்பு பாராட்டியவர். சிலேடை, உவமைக் கதைகளுடன் கூடிய பேச்சால் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியவர்.

1977 முதல் 1986 வரை அமைச்சர் :

1977லும், 1980லும் திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1984ல் மதுரை கிழக்குத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1991ல் கடலாடி தொகுதியில் போட்டியிட்டு (திமுக) தோல்வி அடைந்தார். 2001ம் ஆண்டு திருமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தமிழக அரசில் 1977 முதல் 1986 வரையிலான காலத்தில் வேளாண் துறை, உள்ளாட்சித் துறை, குடிநீர் வழங்கல் துறை அமைச்சராக இருந்தார். 1996ல் மதுரை மேயர் தேர்தலில் தோல்வி அடைந்தார். 2001ம் ஆண்டு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்ற அவர் 1–2–2006ல் தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் பதவியை ராஜிநாமா செய்தார். இதையடுத்து அதிமுகவின் அவைத்தலைவராகப் பொறுப்பேற்றார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் மதுரை மத்திய தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அவர், உடல்நலக் குறைவால் போட்டியிடவில்லை.

நண்பர் வைகோவுடன் காளிமுத்து போட்டி:

மதிமுக பொதுச்செயலாளர் வைகோவும், காளிமுத்துவும் நெருங்கிய நண்பர்கள். இருப்பினும் 1989ல் நடைபெற்ற மக்களவைத்

தேர்தலில் சிவகாசி தொகுதியில் அதிமுக வேட்பாளராகக் காளிமுத்துவும், திமுக வேட்பாளராக வைகோவும் போட்டியிட்டனர். இத்தேர்தலில் காளிமுத்து வெற்றி பெற்றார்.

*கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது அதிமுகவுடன்* மதிமுக கூட்டணி அமைக்க மிகவும் முயற்சித்தவர் காளிமுத்து. இருவரும் புத்தகப்பிரியர்கள். காளிமுத்து இறந்த தகவல் அறிந்தவுடன் வைகோ மிகவும் துயரமடைந்து கண்ணீர் விட்டார்.

திரைப்படங்களுக்கு வசனம்:

அரசியல் பணி, சமூகப்பணி ஆகியவற்றுக்கு இடையே புத்தகங்கள் எழுதுதல், திரைப்படங்களுக்கு வசனம் எழுதுதல் ஆகியவற்றிலும் காளிமுத்து முத்திரை பதித்தவர்.

நாங்கள் கருப்புச் சட்டை கம்யூனிஸ்ட்கள், தொல்காப்பிய இலக்கியக் கொள்கையும்–குறுந்தொகையும், மன்னர் திருமலை, தேவர் திருமகனார், என்னை நான் பார்க்கிறேன் போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

தற்போது தயாரிக்கப்பட்டுவரும் பசும்பொன் தேவர் போன்ற திரைப்படத்திற்குக் காளிமுத்து வசனம் எழுதியுள்ளார்.

குடும்ப விபரம்

காளிமுத்துவுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி நிர்மலா இறந்து விட்டார். அவருக்கு டேவிட் அண்ணாதுரை, ராஜன் என்ற இரண்டு மகன்கள், புனிதா ரோஸி, வேதா என்ற மூன்று மகள்கள் உள்ளனர்.

இரண்டாவது மனைவி மனோகரி. இவருக்கு மணிகண்டன், அருள்மொழித்தேவன் என்ற 2 மகன்களும், அமுதா, கயல்விழி என்ற 2 மகள்களும் உள்ளனர்.

வரலாற்றில் இழப்பு
நன்றி : தினமணி **9–11–2006**

முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவைத் தலைவர் காளிமுத்து இயற்கை எய்திய செய்தியை (9–11–2006) சென்னையில் இருக்கும்போது படித்ததும் அதிர்ச்சி அடைந்தேன். உடனடியாக

முன்னாள் சட்டப்பேரவை, மேலவை உறுப்பினராக இருந்த நண்பர் க. சுப்புவுடன் தொடர்பு கொண்டேன். துயரத்திலும் மலரும் நினைவுகளாகச் சில விஷயங்களை நினைத்து கொண்டோம்.

விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் புதுமுக வகுப்பில் காளிமுத்து பயின்ற வேளை பி.ஏ. முதலாம் ஆண்டு பயின்று வந்த க. சுப்புவுடன் இணைந்து கோவை பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி நடத்திய பேச்சுப்போட்டியில் மாநில அளவிலான முதல் பரிசாக வெற்றிக் கோப்பையைப் பெற்று வந்தனர். அதற்கு முந்திய ஆண்டு க. சுப்பு மற்றொரு மாணவரான அரங்கசாமி என்பவருடன் இணைந்து அதே கோப்பையைப் பெற்று வந்தார்.

பி.ஏ. இறுதியாண்டு படித்து வந்த நாங்கள் புதுமுக வகுப்பு மாணவரான காளிமுத்துவுக்கு உற்சாகமூட்டி, அவருடைய நாவன்மையைக் கண்டு மகிழ்ந்தோம்.

அன்றைய காலகட்டத்தில் தி.மு.க. ஆதரவாளர்கள் மிகப் பெரும்பான்மையாகவும், தி.க. ஆதரவாளர்கள் ஐந்தேபேரும், பொதுவுடைமை இயக்கம் சார்ந்தும் க. சுப்புவைக் கல்லூரி மாணவர் பேரவைச் செயலராக்கிய பண்பாட்டு அரசியல் நிலவியதைப் பெருமையுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

இளம் வயதினராக இருந்தாலும் காளிமுத்துவுக்கு வாய்ப்பளித்த சிறப்பை வியக்கின்றேன்.

1971 தேர்தலில் தி.மு.க. சார்பில் சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் காளிமுத்து முதன்முறையாகப் போட்டியிட்டபோது வளரும் பயிருக்கு நீர் ஊற்றுங்கள் என்ற கருணாநிதியின் வேண்டுகோள் சுவரொட்டிகளில் இடம் பெற்றது. நாற்றங்காலாக திமுக அமைய பயிர் அதிமுகவில் வளர்ந்தது.

பண்பாளர், பழகுதற்கு இனியவர் என்பன பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர் அரிதாகப் பெறும் சிறப்புகள். அவைதாம் காளிமுத்துவின் இயல்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரங்கள் மற்றும் மகிமைகள்

என். கங்கா பவானி
*தெலுங்கு விரிவுரையாளர்*
*ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி*
*குற்றாலம்*

"கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்" என்று அனைத்து பக்தர்களும் பிரார்த்தனை செய்வார்கள். ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரங்கள் நாடு முழுவதும் உள்ளன. ஐந்து ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரங்களைப் பற்றி ஆழ்வார்கள் முக்கியத்துவம் கொடுத்து கூறியுள்ளார்கள். அவற்றில் முதலாவதாகத் திருக்கண்ணபுரம்.

இந்த க்ஷேத்திரம் நாதப்பட்டினம் நன்னிலத்திற்கு இடையே உள்ளது. இங்கு மூலவராக நீலமேகப் பெருமாளும், உற்சவ மூர்த்தி ஸ்ரீ சௌரி பெருமாளும், தாயார் ஸ்ரீ கண்ணாபுர நாயகி ஆகவும் உள்ளனர். இங்கு சுவாமி திருமங்கையாழ்வாருக்கு இங்கேயே "அக்ஷாடாக்ஷரி" மந்திரம் உபதேசம் அளித்தார். இந்த ஊரைச் சுற்றி "காக தீர்த்தவதி" என்ற நதி உள்ளது. இங்கு பிரம்மோற்சவம் 7வது திருநாளில் சுவாமி சிவனாகத் தரிசனம் அளிப்பது விஷேசம். அப்பொழுது விபூதி அலங்காரம் தவறாது செய்யப்படுகிறது. இங்கு சுவாமி "சக்ரம் வீசும்" தோற்றத்தில் காணப்படுகிறார். இங்குதான் இந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்திதோஷம் நீங்கியது என்பதற்கான ஒரு கதை உள்ளது. இந்தச் சுவாமியைப் பற்றி நம்மாழ்வார், பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆண்டாள் பாடியுள்ளனர்.

2வது க்ஷேத்திரம் திருக்கண்ணன் மங்கை. இச்க்ஷேத்ரம் திருவாரூரில் இருந்து 5 மைல் தூரத்தில் உள்ளது. ஸ்ரீ சுவாமியின் பெயரே "பக்தவச்லப் பெருமாள்" எனக் கூறுவார். இங்கு பெருமாள் 'நின்ற கோலத்தில்' காட்சி கொடுக்கிறார். தாயாரின் பெயர் 'அபிஷேக வல்லி'. இந்த க்ஷேத்ரம் ஸ்ரீரங்கத்திற்கு என்ன பெருமையோ அதே அளவு பெருமையாகப் பேசப்படுகிறது. சுவாமி ஸ்ரீ லட்சுமி தேவியை மணம்புரிந்த இடம் ஆகும். இங்கு உள்ள தேனீக்கள் யாரையும் துன்புறுத்துவது இல்லை. ஏன் என்றால் அவைகள் தேவர்களும் ரிஷிகளும் ஆக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த சுவாமியினைப் பதினாலு பாசுரங்களில் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார்.

அடுத்து திருக்கபிஸ்தலம்:- இந்த க்ஷேத்ரம் பாபநாசம் இரயில்வே ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இங்கு உள்ள மூலவர் 'கஜேந்தரவரதர்' ஆவர். இங்கு சுவாமி புஜங்க சயன ரூபத்தில் காட்சி கொடுக்கிறார். தாயார் பெயர் 'ரமாவணிவல்லி'. இந்தச் க்ஷேத்ரத்தைத் திருமங்கையாழ்வார் தனது பாசுரத்தில் பாடியுள்ளார். இந்த இடத்தைத்தான் 'கஜேந்திர மோட்சம்' நிகழ்ந்த இடமாகச் சொல்லப்படுகிறது.

அடுத்ததாகத் திருக்கண்ணன்குடி:- இந்தச் க்ஷேத்ரம் நாகப்பட்டிணம், திருவாரூர் ரயில் வழியில், கீழவேலூருக்கு பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஸ்ரீ மூலவர் பெயர் லோகநாத பெருமாள். ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோருடன் சுவாமி நின்ற கோலத்தில் காட்சி கொடுக்கிறார். இந்த சுவாமியைப் பற்றி பத்து பாசுரங்களில் ஸ்ரீதிருமங்கையாழ்வார் பாடியுள்ளார். இந்த க்ஷேத்ரத்தில், சுவாமி நின்ற, படுத்த, அமர்ந்த ஆகிய மூன்று திருக்கோலங்களில் காட்சி தருவது மிகவும் விஷேசம். இந்த மாதிரி ஷேத்ரங்கள் வைஷ்ணவர்கள் அனைவராலும் புனிதமாக கருதப்படுகிறது.

ஐந்து கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரங்களில் திருக்கோயிலூர் ஒன்று. இது விழுப்புரம் காட்பாடி ரயில் பாதையில் உள்ளது. வைணவர்களுக்கு இது புனிதத்தலம். முதலாழ்வார்கள் சந்தித்த இடம். இங்குள்ள கடவுள் 'திருவிக்ரமவர்'. உற்சவர் அயினார் அல்லது கோபாலன். தாயார் பூங்கோவை நாச்சியார். இங்கு இருக்கின்ற பெருமாளைப் பற்றி முதலாழ்வார், திருமங்கை ஆழ்வார் இருபத்து ஒன்று பாசுரங்களில் பாடியுள்ளனர்.

அப்படிப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனின் பெருமை பற்றியும் மகிமைகளைப் பற்றியும் தெலுங்கில் அன்னாமாச்சார்யலு, ஆழ்வார்க்ளில் ஒருவரான ஸ்ரீ குலசேகர ஆழ்வார் அவர்களுடைய படைப்பில் எந்த விதங்களில் ஒப்பிட்டார்களோ அதனை இந்தக் கட்டுரையில் ஒப்பு நோக்கித் தெரிவித்துள்ளேன்.

தெலுங்கு மொழியில் முதன் முதலாக சங்கீர்த்தனங்கள் எழுதிய பெரிய கவிஞர் ஸ்ரீ அன்னமாச்சார்யலு. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் முப்பத்து இரண்டாயிரம் கீர்த்தனைகள் எழுதினார். இவற்றில் தற்சமயம் பன்னிரண்டாயிரம் கீர்த்தனைகள்

மட்டுமே உள்ளன. ஸ்ரீ அன்னமாச்சார்யலு இந்த தசாவதாரங்களுக்குச் சம்பந்தப்பட்ட கீர்த்தனைகள் நூற்றுக்கணக்காக எழுதினார். இவற்றில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் பற்றிய கீர்த்தனைகள் அதிகம் காணப்படுகின்றன. *தசாவதாரங்களில், ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்தான் முழுமையான அவதாரமாக சொல்லப்படுகின்றது. ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றி ஸ்ரீ அன்னமாச்சார்யலு* வர்ணிப்பதில் எந்தவித ஆச்சர்யம் உள்ளது? அது போலவே ஸ்ரீ குலசேகர ஆழ்வார் கூட ஸ்ரீ ராமனிடம் உள்ள அபரிதமான பக்தி இருந்ததாலும், ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றி மிகுந்த பக்தியுடன் சமஸ்கிருதத்தில் தனிப்பட்ட முறையில் "ஸ்ரீ முகுந்தமாலா" என்ற நூல் *எழுதினார். ஸ்ரீ முகுந்த மாலையில் நாற்பது ஸ்லோகங்கள் உள்ளன.* இந்த அன்னமாச்சார்யலு, குலசேகர ஆழ்வார் ஆகிய இருவரின் *படைப்புகளில் அந்த வைஷ்ணவ சித்தாந்த சிறப்புகள்* காணப்படுகின்றன.

முதலாவதாக,

1. *மங்களா சாசனம்:-*

*மங்களா சாசனம் என்றால் பக்தர்கள் பகவானின் அழகான* தோற்றத்தைப் பார்த்து அவர் மேல் உள்ள பாசத்தினால், அந்த சுவாமிக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் கோடி கோடி வருடங்கள் நன்றாக இருக்க வேண்டும் எனக் கோருவார்கள். இங்கு அன்னமாச் சார்யா, ஸ்ரீ குலசேகர ஆழ்வார் ஆகிய இருவரும் ஸ்ரீகிருஷ்ணனுடைய அந்த அழகான தோற்றத்தைப் பார்த்து அவருக்கு *மங்களா சாசனம்* செய்தார்கள். ஸ்ரீகுலசேகர ஆழ்வார் தன்னுடைய "ஸ்ரீ முகுந்த மாலையில்" பின்வருமாறு தெரிவிக்கிறார்.

ஜெயது ஜெயது தேவோ தேவகி நந்தனோயம்
ஜெயது ஜெயது கிருஷ்ணோ வ்ருஷ்ணவம்சப்ரீதீபகா
ஜெயது ஜெயது மேஹா ஸ்யாமளலகா கோமலாங்கோ
ஜெயது ஜெயது ப்ருத்வி பாராணாசோ முகுந்தகா

இதற்கு அர்த்தம்:-

தேவகி குமாரனுக்கு ஜெயம், ஜெயம்
யாதவகுல கிருஷ்ணனுக்கு ஜெயம், ஜெயம், கருநீல
வர்ணமுடைய கிருஷ்ணனுக்கு ஜெயம், ஜெயம், பூபாரத்தைக்
குறைக்க வந்து அவதாரம் எடுத்த முகுந்தனுக்கு ஜெயம்,
ஜெயம்.

ஸ்ரீ அன்னமாச்சார்யலு கூட ஸ்வாமியின் திவ்யமங்கள கரமான தோற்றத்தைப் பார்த்து, மெய் மறந்து இப்படியாக மங்களா சாசானம் செய்தார்.

மரலி மரலி ஜெய மங்களம்
சுரதி நிச்சலுனு ஜெய மங்களம்
கமலா ரமணிக்கி கமலாக் சூணக்குனு
மமதலா ஜெய ஜெய மங்கள மு
அமர ஜனனிகினி அமரா வந்த்யூனனுக்குனு
சுமுகூர்த்த முதோ சுபமங்களமு

2. சரணாகதி:-

பகவானின் பாத கமலங்களை அடைவதற்குக், கர்மா, ஞானம், பக்தி, பிரபக்தி, வழிகள் கூறப்படுகின்றன. கர்மா, ஞானம், பக்தி இம்மூன்றும் அடைவதற்கு முழுமையான தெளிவு வரவேண்டியது மிகவும் சிரமம். அப்படியும் இல்லாமல் இந்த மூன்றையும் அடைவது சிரமம். ஆனால் பிரபத்தி என்ற வழி மட்டும் மிகவும் எளிதானது. விபீஷணன், திரௌபதி, அர்ச்சுனன், கஜேந்திரன் போன்ற எவ்வளவோ புராண காலத்து சிறந்த நபர்கள் பகவானிடம் சரணடைந்து அவரது அனுக்கிரஹத்தை அடைந்தார்கள்.

ஸ்ரீகுலசேகர ஆழ்வார் தனது "ஸ்ரீ முகுந்தமாலையில்",
த்யாந்தியே விஷ்ணமனந்த மவ்ய்யம்
க்ருத்மத்மா மத்யே சததம் வ்யவ்ஸ்த்திதம்
சமாஹிதானாம் சததா பயப்ரதம்
தேயாந்தி சித்தம் பரமாஞ்ச வைஷ்ணவீம்

இதற்கான விளக்கம்:-

ஆதி, அந்தம் இல்லாதவரும் மாற்றமில்லாதவரும், இருதய தாமரையில் நிரந்தரமாக எப்போதும் உள்ளவரும், மாற்றம் இல்லா எண்ணம் கொண்டவர்களுக்கு அபயம் கொடுத்த வரும் ஆகிய அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவுடன் உள்ள நிலையும் உடைய மோட்சம் அடைவார்கள்.

அன்னமாச்சார்யலு அந்த சரணாகதி பற்றி ஆயிரக் கணக்கான கீர்த்தனங்கள் பாடினார்.

"சர்வேஸ்வருடே பொம்தேட்டி உஸ்துவு
சரணாகதியே உபாயமு" என,

இன்னொரு கீர்த்தனையில்,

"வேதமுலு தெச்சினட்டி விபுனிக்கி சரணு
ஆதிமூல மண்டே உச்சினதினிக்கு சரணு
ஏதசா தானேயுன்ன இதனிக்கு சரணு
ஸ்ரீதேவி மகடயினா ஸ்ரீபதிக்கு சரணு
அந்தரிக்கு ப்ராணமையான அதனிக்கு சரணு
மூடு மூர்த்துல மூர்த்திக்கு சரணு" என்று பாடினார்.

3. பாகவத சேவை:-

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்கள் ஏதுமில்லை. பகவானின் பக்தர்களையும், பக்தியுடன் சேவிப்பது சிறந்தது என்ற பாவனை உள்ளது. இதையே "*தாசபக்தி*" *என்று கூட கூறுவார்கள். ஸ்ரீகுலசேகர ஆழ்வார் தனது ஸ்ரீமுகுந்த மாலையில்,*

"*மச்ஜன்மனகா பலமிதம் மதுகைடபாரே*
மப்ரார்த்த நீய மதனுக் கிரஹ ஏஷயேவா
த்வத் ப்ருத்ய பரிசாரக ப்ருத்ய ப்ருத்ய
ப்ருத்ஸ்ய ப்ருத்ய இதிமாம் ஸ்மரா லோகநாதா"

இதற்கு அர்த்தம்:-

மது கைடபன் என்ற ராட்தர்களைச் சம்ஹாரம் பண்ணினவரே! ஜகன்னாயகா! எனது பிறப்பிற்கு இதுவே பலனாகும். நான் உன்னிடம் பிரார்த்திப்பதும், நீ எனக்கு அனுக்கிரஹம் செய்வதும் இதுதானே! உன்னுடைய பக்தனுக்கு பக்தனாக என்ற வரிசையில் என்னையும் நினைவில் வைத்துக் கொள்ள நான் வேண்டும் கோரிக்கை.

அப்படியே ஸ்ரீ அன்னமா சார்யலு ஒரு கீர்த்தனையில் இப்படிச் சொன்னார். மேற்கண்ட ஸ்லோகத்திற்கு இது தெலுங்கு அனுபாகமாகக் கூட எடுத்துக் கொள்ளலாம்.

'அச்சுத மிம்மா தலசேயந்த பனிபலினா
இச்சட மீவாரே மாகூட நிகபர தீயஹா
அந்தி நீகூ பக்துலைன எலா மயானுபாவுலா
சந்தபு வாரிபை பக்தி சாலதா நாகூ
கந்துவ ஸ்ரீ வெங்கடேச கடுக்கி பண்டு பண்டுகூ
சந்தடி பண்டு நவுடே ச்சாலதா நாகூ'

என

இப்படியே மேலும் ஒரு கீர்த்தனையில்,

'ஹரி நீ பிரசாத ஜீவினை கர்விஞ்சுட கண்டே' என

இப்படி பகவானுடைய பக்தர்களுக்கான பெருமையைச் சொன்னார்.

4. நாமசங்கீர்த்தனம்:-

அந்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய நாமத்தை எவர் எப்பொழுதும் நினைவு கூர்கிறார்களோ அவர்களுக்கு மோட்சம் நிச்சயமாகக் கிடைக்கும் என ஸ்ரீ குலசேகர ஆழ்வார் ஒரு ஸ்லோகத்தில் இப்படிக் கூறுகிறார்.

'ஸ்ரீநாத நாரயண, வாசுதேவ,
ஸ்ரீகிருஷ்ணா பக்தப் பிரிய சக்ரப் பானே
ஸ்ரீபத்மனாபச்சுத கைடபாரே
ஸ்ரீராம பத்மாக்ஷ ஹரே முராரே'

இதற்கு அர்த்தம்:-

லக்ஷ்மிபதி! நாராயணா! வாசுதேவா! ஸ்ரீகிருஷ்ணா! பக்தப் பிரியா! சக்ரபாணி ஸ்ரீ பத்மனாபா! அச்சுதா! கைடபாரே! ஸ்ரீராமா ! பத்மாட்ஷா! ஹரி! முராரி! எனத் தெரிவிக்கிறார்.

இந்த நாம சங்கீர்த்தனத்தின் மஹிமைகளை அன்னமாச்சார்யலு அநேக கீர்த்தனைகளில் வர்ணிக்கிறார். உதாரணமாக ஒரு கீர்த்தனை:-

"சாலதா ப்ரக்மமிதி சங்கீர்த்தனம் மீகூ
ஜாலல்லா நடகிஞ்சு சம்கீர்த்தனம்
சந்தோஷ கரனமனா சம்கீர்த்தனம்
சந்தாபமன கிஞ்சு சம்கீர்த்தனம்
ஜந்துவல ரட்ஹிஞ்சு சம்கீர்த்தனம்

சம்ததமு தலசு ஒ சம்கீர்த்தனம்"

மேலும் இன்னொரு கீர்த்தனையில்,

'பவமுலோனா பாக்யமுனந்து

கோவிந்த, கோவிந்த யெனி கொலுவவோ மனசா'

இவ்வாறு பாடினார்.

5. வைராக்யம்:-

சம்சாரம் சுகம் அளிக்கக் கூடியது என்ற எண்ணத்தில் அதிலேயே ஈடுபடுகிறோம். ஆனாலும் இது துன்பத்தையே கொடுக்கிறது. இதிலிருந்து விடுபட வேண்டும் என்றால் அந்த ஸ்ரீ கிருஷ்ணன்தான் வழிகாட்டி! என ஸ்ரீ குலசேகர ஆழ்வார் எடுத்து உரைக்கிறார்.

'கரச்சரண சரோஜே காந்தி மன்னேந்திர மீனே

சிரமுர புஜா வீசி வ்யாகுலே காதமார்க்கே

ஹரிசரசி விஹாக்யாபீய தோஜோ ஜலோஹம்

பவமரு பரிக்கின்னஹா கேதா மத்ய த்யஹாமி'

இந்த சம்சாரமாகிய பாலைவனத்தில் இருந்த துன்பத்திலிருந்த நான், இந்த மஹா விஷ்ணு என்ற தடாகத்தில் இறங்கி தாகம் தீர பருகி எனது துன்புத்தை விட்டு விடுகிறேன்.

ஸ்ரீ அன்னமாச்சார்யலு கூட அநேக கீர்த்தனைகள் இந்த சம்சார வைராக்யத்தைப் பற்றி பாடியுள்ளார். அனைத்து ஜீவராசிகளும் சம்சாரம்தான் சுகம் என நினைத்து உள்ளார்கள். ஆனால் சம்சாரம்தான் எல்லா துன்பங்களுக்கும் காரணம்! நமக்கு எப்பொழுது பக்தி ஏற்படுகிறதோ அப்பொழுது சம்சார துன்பத்திலிருந்து விடுபட முடியும் என

"இதிவோ சம்சார மெந்த சுகமோ கானி"

என்ற கீர்த்தனையில் கூறினார்.

'கூடி பெட்டே கடா கடா சம்சார சூடா'

என்ற கீர்த்தனையில் சம்சாரத்தில் உள்ள துன்பங்களை இப்படி வர்ணிக்கிறார்.

கடலைத் தாண்டுவது எவ்வளவு கடினமோ அவ்வாறேஇந்த சம்சாரத்திலிருந்து முக்தி பெறுவதும் கடினமே! சம்சாரம் என்பது எந்த வேளையிலும் எமனிடமிருந்து விடுபட முடியாத நிலைமையை உடையதாக உள்ளது. எப்பொழுதும் எவர் ஒருவர் பகவானை பூஜித்துக் கொண்டு இருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் சம்சார துன்பம் வந்து அடையாது என அன்னமாச்சார்யலு கூறுகிறார்.

6. ஸ்ரீகிருஷ்ண ஔஷதம்:-

ஜனன, மரண என்றநோயிலிருந்து விடுபட வேண்டும் எனில் ஸ்ரீமன் நாராயணன் என்னும் ஸ்ரீ கிருஷ்ண ஔஷதத்தை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென ஸ்ரீ அன்னமாச்சார்யலு, ஸ்ரீ குலசேகர ஆழ்வார் இருவரும் மிகவும் அழுத்தமாகச் சொன்னார்கள். இந்த உலகத்தில் சுகமாக வாழ்வதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் மட்டும்தான் நெருங்கிய மருந்து என ஸ்ரீ குலசேகர ஆழ்வார் சொன்னார்.

*'இதம் சரீரம் பரிணாம பேசலம்*
பதத்ய வச்யம் ஸ்லப சந்தி சர்ச்சரம்
ஹிமௌஷதக கிளச்யசி மூடா துர்மதே
நிராமயம் கிருஷ்ண ரசாயணம் பிபர்

இதற்கு விளக்கம்:-

ஓ மூடனே! யோசனை இல்லாத குறைமதியாளனே! இந்த உடம்பு அழிந்து, மூட்டுக்கள் எல்லாம் தளர்ந்து போய் கீழ்விழுவதற்குத் தயாராக இருக்கிறது. இந்த உடம்பினைக் காப்பாற்றவிதவிதமான மருந்துகளை எல்லாம் உபயோகப்படுத்தி வருந்துகிறீர்கள். எந்த நோயினையும் நீக்கக் கூடிய ஸ்ரீ கிருஷ்ண பகவானின் நாமம் என்றஒரு சிறந்த ஔஷதத்தை நீ பருகு ! அப்படியே ஸ்ரீ அன்னமாச்சார்யலு அவர்கள் கூட, ஓ! ஜனங்களே! நீங்களும் அந்த பகவான் என்னும் மருந்தினை பருகுங்கள் என்று

'துருவுடு கொனினி மந்து – தொல்வியு ப்ரகலாதுடு'

கீர்த்தனையில் சொல்லுகிறார்.

துருவன், பிரகலாதன், நாரதன், ஜனகன் ஆகிய பக்தர்கள் பகவான் எனும் கீர்த்தனை மட்டும் அல்லாமல் இதர கீர்த்தனைகளிலும் இந்த பகவான் நாமம்தானே ஓர் சிறந்த ஔஷதம் என அன்னமாச்சார்யார் வர்ணித்தார்.

'வேத வேத்யுலு வெத ஹேரட்டி
ஆதியந்தியமுலேனி ஆமந்து' என

மேலும் ஒரு கீர்த்தனையில்,

'அன்னிட்டிகி நிதா பரமௌஷதம்
வென்னுனி நாமமே விமலௌஷதம்'

எனக் கூறினார்.

அந்த பகவானின் சேவை நீங்கலாக வேறு எந்தவிதமான யக்ஞம், யாகம், ஜெபம், தபங்கள், தான தர்மங்கள் செய்தாலும் பிரயோஜனம் ஏதுமில்லை என ஸ்ரீ குலசேகர ஆழ்வார், ஸ்ரீ அன்னமயா இருவரும் கூறினார்கள்.

ஸ்ரீ அன்னமையா, ஸ்ரீ குலசேகர ஆழ்வார் ஆகிய இருவரின் படைப்புகளிலும் ஸ்ரீ வைஷ்ணவம் சம்பந்தப்பட்ட சில ரகசியங்கள் இருக்கின்றன. அவற்றில்,

1. ஸ்ரீ கிருஷ்ணன்தான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய ஆகிய மோட்சமளிப்பவர்.
2. எவ்வளவு ஜன்மம் எடுத்தாலும், மனிதர்கள் வேண்டுவது அவரது பாத கமலங்களில் நீங்காத பக்திதான் சரணாகதி!
3. ஸ்ரீகிருஷ்ணன் மீது நீங்காத பக்தி இருப்பதுதான் சம்சாரம் என்றகடலைத் தாண்ட முடியும்.
4. ஸ்ரீ கிருஷ்ணன் மீது பக்தி இல்லாதவர்களிடம் நட்பு பாராட்டக் கூடாது.
5. நாம சங்கீர்த்தனம் செய்வதன் மூலம் நமது பாபங்கள்நசிந்து போகும்.
6. பகவானின் பக்தர்களைச் சேவித்தாலே போதும், நமது வாழ்க்கை நன்மையடையும், அதுதானே முக்திக்கு ஒரு வழியாகும்.

இந்த விதத்தில் அன்னமையா சங்கீர்த்தனங்கள் ஸ்ரீ குலசேகர ஆழ்வார் ஸ்ரீ முகுந்தமாலை ஆகியவற்றை ஒப்பிடும் பொழுது, சரணாகதி தத்துவம்! நாம சங்கீர்த்தன பிரபாவம், மங்களா சாசனம்! பாகவத பக்தி! அப்படிப்பட்ட எவ்வளவோ விளக்கங்கள் காணப்படுகின்றன.

பதிப்பாசிரியர்

**பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர். திரு. சுப. அண்ணாமலை
முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர். திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர். திரு. செ. கந்தசாமி
முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

# மதுரைத் தமிழ்ச்சங்க
# நூற்றாண்டு மலருக்கு

**தமிழ், தமிழ்ப் பண்பாடு,**
**தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்**
மற்றும்
**வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**
குறித்த கட்டுரைகள் அனுப்ப

தொடர்பு முகவரி


பதிப்பாசிரியர்,
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707


அனுப்புநர்,

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை-1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 1.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,